# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் A+ தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024,


அலுவலகம் : 0431 – 2407016, 2407060

முனைவர் பா. ஜெயபிரகாஷ், M.L.I.Sc., M.Phil., Ph.D.,
தேர்வு நெறியாளர்(பொ)

மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


---

ந.க. எண்: தே.பி./இளநிலை/செய்முறைத்தேர்வுகள் /ஏப்ரல் 2026/ நாள்: 17.02.2026

பெறுபவர்
முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

பொருள்: இளநிலைத் தேர்வுப் பிரிவு–ஏப்ரல் 2026–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான திட்டகட்டுரை மற்றும் வாய்மொழிதேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணை தெரிவித்தல் - தொடர்பாக.

------------

பாரதிதாசன் பல்கலைக்கழக ஏப்ரல் 2026-ல் நடைபெறவிருக்கும் இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகளின் தேர்வு கால அட்டவணையின்படி, 02.03.2026 முதல் 18.03.2026 வரையிலான கால இடைவெளியில் திட்டகட்டுரை மற்றும் வாய்மொழித்தேர்வுகளை (Project & Viva-Voce) தாங்களே நடத்தி கொள்வதற்கும் அதற்கான அக மற்றும் புற மதிப்பெண்களை இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இறுதிப் பருவம் (ஆறாம் பருவம்) பயிலும் மாணாக்கர்கள் மட்டும், இதற்கு முன்பாக நடைபெற்ற **(ஒன்று முதல் ஐந்தாம் பருவம் வரை)** ஏதேனும் செய்முறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறாமல் இருப்பின், அவர்கள் எந்த பருவச் செய்முறைத் தேர்வுகளையும் செய்ய அனுமதிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர்(பொ)

நகல்.:

1. மந்தனப்பிரிவு - I மற்றும் II பாரதிதாசன் பல்கலைகழகம்.
2. கணக்குப்பிரிவு - பாரதிதாசன் பல்கலைகழகம்.
3. கணினிப் பிரிவு (U.G).
4. பிரிவு அலுவலர்கள், B.A/B.B.A/B.Com., B.Sc., பாடப்பிரிவுகள்
5. உதவி பதிவாளர் - PG Section.